ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

குலஶேகரப்பெருமாள் அருளிச்செய்த

# ॥ பெருமாள் திருமொழி ॥

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

## பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| **1** | பெருமாள் திருமொழித் தனியன்கள் | **2** |
| **2** | இருளிரிய | **3** |
| **3** | தேட்டருந்திறல் | **7** |
| **4** | மெய்யில்வாழ்க்கையை | **11** |
| **5** | ஊனேறு | **15** |
| **6** | தருதுயரந்தடாயேல் | **19** |
| **7** | ஏர்மலர்ப்பூங்குழல் | **23** |
| **8** | ஆலைநீள் கரும்பு | **27** |
| **9** | மன்னு புகழ் | **31** |
| **10** | வன்தாளினிணை | **35** |
| **11** | அங்கண் நெடுமதிள் | **39** |

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெருமாள் திருமொழித் தனியன்கள்

## தனியன்கள்

இன் அமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே ! ⋆
தென் அரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் ⋆
பொன்னம் சிலை சேர் நுதலியர் வேள் சேரலர் கோன் ⋆
எங்கள் குலசேகரன் என்றே கூறு

ஆரம் கெடப்பரன் அன்பர் கொள்ளார் என்று ⋆
அவர்களுக்கே வாரங்கொடு குடப் பாம்பில் கையிட்டவன் ⋆
மாற்றலரை வீரங்கெடுத்த செங்கோல் கொல்லி காவலன்
வில்லவர் கோன் ⋆ சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே

பெருமாள் திருமொழித் தனியன்கள் முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1 – இருளிரிய

‡ இருள் இரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி ⋆
இனத் துத்தி அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த ⋆
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும் ⋆
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி ⋆
திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி ⋆
திரைக் கையால் அடி வருடப் பள்ளி கொள்ளும் ⋆
கரு மணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு ⋆
என் கண் இணைகள் என்று கொலோ களிக்கும் நாளே ! ‖ **1.1** ‖ 1

‡ வாயோர் ஈர் ஐஞ்ஞூறு துதங்கள் ஆர்ந்த ⋆
வளை உடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த செந்தீ ⋆
வீயாத மலர்ச் சென்னி விதானமே போல் ⋆
மேன்மேலும் மிக எங்கும் பரந்த தன் கீழ் ⋆
காயாம்பூ மலர்ப் பிறங்கல் அன்ன மாலைக் ⋆
கடி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
மாயோனை மணத்தூணே பற்றி நின்று ⋆
என் வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே ! ‖ **1.2** ‖ 2

எம்மாண்பின் அயன் நான்கு நாவினாலும் ⋆
எடுத்தேத்தி ஈர் இரண்டு முகமும் கொண்டு ⋆
எம்மாடும் எழில் கண்கள் எட்டினோடும் தொழுதேத்தி ⋆
இனிதிறைஞ்ச நின்ற ⋆
செம் பொன் அம்மான் தன் மலர்க் கமலக் கொப்பூழ் தோன்ற ⋆

அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
அம்மான் தன் அடி இணைக் கீழ் அலர்கள் இட்டு ⋆
அங்கடியவரோடென்று கொலோ அணுகும் நாளே ! ‖ **1.3** ‖ 3

மாவினை வாய் பிளந்துகந்த மாலை ⋆
வேலை வண்ணணை என் கண்ணனை வன் குன்றம் ஏந்தி ⋆
ஆவினை அன்றுய்யக் கொண்ட ஆயர் ஏற்றை ⋆
அமரர்கள் தந் தலைவனை அந்தமிழின் இன்பப்பாவினை ⋆
அவ் வடமொழியைப் பற்றற்றார்கள் ⋆
பயில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
கோவினை நாவுற வழுத்தி எந்தன் கைகள் ⋆
கொய்ம் மலர் தூய் என்று கொலோ கூப்பும் நாளே ! ‖ **1.4** ‖ 4

இணை இல்லா இன்னிசை யாழ் கெழுமி ⋆
இன்பத் தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்த ⋆
துணை இல்லாத் தொன் மறை நூல் தோத்திரத்தால் ⋆
தொன் மலர்க் கண் அயன் வணங்கி ஓவாதேத்த ⋆
மணி மாட மாளிகைகள் மல்கு செல்வ ⋆
மதில் அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
மணிவண்ணன் அம்மானைக் கண்டு கொண்டு ⋆
என் மலர்ச் சென்னி என்று கொலோ வணங்கும் நாளே ! ‖ **1.5** ‖ 5

அளி மலர் மேல் அயன் அரன் இந்திரனோடு ⋆
ஏனை அமரர்கள் தம் குழுவும் அரம்பையரும் மற்றும் ⋆
தெளி மதி சேர் முனிவர்கள் தம் குழுவும் உந்தித் ⋆
திசை திசையில் மலர் தூவிச் சென்று சேரும் ⋆
களி மலர் சேர் பொழில் அரங்கத்துரகம் ஏறிக் ⋆
கண் வளரும் கடல் வண்ணர் கமலக் கண்ணும் ⋆

ஒளி மதி சேர் திரு முகமும் கண்டு கொண்டு ⋆
என் உள்ளம் மிக என்று கொலோ உருகும் நாளே ! ‖ **1.6** ‖ 6

மறம் திகழும் மனம் ஒழித்து வஞ்ச மாற்றி ⋆
ஐம் புலன்கள் அடக்கி இடர்ப் பாரத் துன்பம் துறந்து ⋆
இரு முப்பொழுதேத்தி எல்லை இல்லாத் தொன்னெறிக் கண் ⋆
நிலை நின்ற தொண்டரான ⋆
அறம் திகழும் மனத்தவர் தம் கதியைப் பொன்னி ⋆
அணி அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
நிறம் திகழும் மாயோனைக் கண்டென் கண்கள் ⋆
நீர் மல்க என்று கொலோ நிற்கும் நாளே ! ‖ **1.7** ‖ 7

கோல் ஆர்ந்த நெடும் சார்ங்கம் கூனற் சங்கம் ⋆
கொலை ஆழி கொடுந் தண்டு கொற்ற ஒள் வாள் ⋆
கால் ஆர்ந்த கதிக் கருடன் என்னும் ⋆
வென்றிக் கடும் பறவை இவை அனைத்தும் புறம் சூழ் காப்ப ⋆
சேல் ஆர்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த ⋆
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
மாலோனைக் கண்டின்பக் கலவி எய்தி ⋆
வல் வினையேன் என்று கொலோ வாழும் நாளே ! ‖ **1.8** ‖ 8

தூராத மனக் காதல் தொண்டர் தங்கள் குழாம் குழுமித் ⋆
திருப் புகழ்கள் பலவும் பாடி ⋆
ஆராத மனக் களிப்போடழுத கண்ணீர் மழை சோர ⋆
நினைந்துருகி ஏத்தி ⋆
நாளும் சீரார்ந்த முழவோசை பரவை காட்டும் ⋆
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆

போர் ஆழி அம்மானைக் கண்டு துள்ளிப் ⋆
பூதலத்தில் என்று கொலோ புரளும் நாளே ! ‖ **1.9** ‖ 9

‡ வன் பெரு வானகம் உய்ய அமரர் உய்ய மண் உய்ய ⋆
மண் உலகில் மனிசர் உய்ய ⋆
துன்ப மிகு துயர் அகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர ⋆
அக மகிழும் தொண்டர் வாழ ⋆
அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளி கொள்ளும் ⋆
அணி அரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள் ⋆
இன்ப மிகு பெருங்குழுவு கண்டு ⋆
யானும் இசைந்துடனே என்று கொலோ இருக்கும் நாளே ! ‖ **1.10** ‖ 10

‡ திடர் விளங்கு கரைப் பொன்னி நடுவு பாட்டுத் ⋆
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் ⋆
கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக் ⋆
கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால் ⋆
குடை விளங்கு விறல் தானைக் கொற்ற ஒள் வாள் ⋆
கூடலர் கோன் கொடைக் குலசேகரன் சொற் செய்த ⋆
நடை விளங்கு தமிழ் மாலை பத்தும் வல்லார் ⋆
நலந் திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே ‖ **1.11** ‖ 11

அடிவரவு — இருள் வாய் எம்மாண்பின் மாவினை இணை அளி மறம் கோல்
தூராத வன்பெரு திடர் தேட்டு

இருளிரிய முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 2 – தேட்டருந்திறல்

‡ தேட்டருந் திறல் தேனினைத் ⋆
தென் அரங்கனைத் ⋆
திரு மாது வாழ் வாட்டம் இல் வனமாலை மார்வனை வாழ்த்தி ⋆
மால் கொள் சிந்தையராய் ⋆
ஆட்ட மேவி அலந்தழைத்து ⋆
அயர்வெய்தும் மெய் அடியார்கள் தம் ⋆
ஈட்டம் கண்டிடக் கூடுமேல் ⋆
அது காணும் கண் பயன் ஆவதே ॥ **2.1** ॥ 12

தோடுலா மலர் மங்கை தோள் இணை தோய்ந்ததும் ⋆
சுடர் வாளியால் ⋆
நீடுமா மரம் செற்றதும் நிரை மேய்த்ததும் ⋆
இவையே நினைந்து ⋆
ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் ⋆
தொண்டரடிப் பொடி ஆடநாம் பெறில் ⋆
கங்கை நீர் குடைந்தாடும் ⋆
வேட்கை என் ஆவதே ॥ **2.2** ॥ 13

ஏறடர்த்ததும் ஏனமாய் நிலம் கீண்டதும் ⋆
முன் இராமனாய் ⋆
மாறடர்த்ததும் மண் அளந்ததும் ⋆
சொல்லிப் பாடி ⋆
வண் பொன்னிப் பேர் ஆறு போல் வரும் கண்ண நீர் கொண்டு ⋆

அரங்கன் கோயில் திரு முற்றம் ⋆
சேறு செய் தொண்டர் சேவடிச் ⋆
செழும் சேறென் சென்னிக்கணிவனே ‖ **2.3** ‖ 14

தோய்த்த தண் தயிர் வெண்ணெய் பாலுடன் உண்டலும் ⋆
உடன்றாய்ச்சி கண்டு ⋆
ஆர்த்த தோள் உடை எம்பிரான் ⋆
என் அரங்கனுக்கடியார்கள் ஆய் ⋆
நாத் தழும்பெழ நாரணா ! என்றழைத்து ⋆
மெய் தழும்பத் தொழுதேத்தி ⋆
இன்புறும் தொண்டர் சேவடி ⋆
ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே ‖ **2.4** ‖ 15

பொய் சிலைக் குரல் ஏற்றெருத்தம் இறுத்துப் ⋆
போர் அரவீர்த்த கோன் ⋆
செய் சிலைச் சுடர் சூழ் ஒளித் ⋆
திண்ண மா மதிள் தென் அரங்கனாம் ⋆
மெய் சிலைக் கரு மேகம் ஒன்று ⋆
தம் நெஞ்சுள் நின்று திகழப் போய் ⋆
மெய் சிலிர்ப்பவர் தம்மையே நினைந்து ⋆
என் மனம் மெய் சிலிர்க்குமே ‖ **2.5** ‖ 16

ஆதி அந்தம் அனந்தம் அற்புதம் ஆன ⋆
வானவர் தம் பிரான் ⋆
பாதமா மலர் சூடும் பத்தி இலாத ⋆
பாவிகள் உய்ந்திட ⋆
தீதில் நன்னெறி காட்டி ⋆
எங்கும் திரிந்தரங்கன் எம்மானுக்கே ⋆

காதல் செய் தொண்டர்க்கெப்பிறப்பிலும் ⋆
காதல் செய்யும் என் நெஞ்சமே ॥ **2.6** ॥ 17

கார் இனம் புரை மேனி நற் கதிர் ⋆
முத்த வெண்ணகைச் செய்ய வாய் ⋆
ஆர மார்வன் அரங்கன் என்னும் ⋆
அரும் பெரும் சுடர் ஒன்றினைச் ⋆
சேரும் நெஞ்சினர் ஆகிச் சேர்ந்து ⋆
கசிந்திழிந்த கண்ணீர்களால் ⋆
வார நிற்பவர் தாள் இணைக்கு ⋆
ஒரு வாரம் ஆகும் என் நெஞ்சமே ॥ **2.7** ॥ 18

மாலை உற்ற கடல் கிடந்தவன் ⋆
வண்டு கிண்டு நறுந் துழாய் ⋆
மாலை உற்ற வரைப் பெருந் திருமார்வனை ⋆
மலர்க் கண்ணனை ⋆
மாலை உற்றெழுந்தாடிப் பாடித் ⋆
திரிந்தரங்கன் எம்மானுக்கே ⋆
மாலை உற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு ⋆
மாலை உற்றதென் நெஞ்சமே ॥ **2.8** ॥ 19

மொய்த்துக் கண் பனி சோர மெய்கள் சிலிர்ப்ப ⋆
ஏங்கி இளைத்து நின்று ⋆
எய்த்துக் கும்பிடு நட்டம் இட்டெழுந்து ⋆
ஆடிப் பாடி இறைஞ்சி ⋆
என் அத்தன் அச்சன் அரங்கனுக்கு ⋆
அடியார்கள் ஆகி ⋆

அவனுக்கே பித்தராம் அவர் பித்தர் அல்லர்கள் ⋆
மற்றையார் முற்றும் பித்தரே ॥ **2.9** ॥ 20

‡ அல்லி மா மலர் மங்கை நாதன் ⋆
அரங்கன் மெய் அடியார்கள் தம் ⋆
எல்லை இல் அடிமைத் திறத்தினில் ⋆
என்றும் மேவு மனத்தனாம் ⋆
கொல்லி காவலன் கூடல் நாயகன் ⋆
கோழிக்கோன் குலசேகரன் ⋆
சொல்லின் இந் தமிழ் மாலை வல்லவர் ⋆
தொண்டர் தொண்டர்கள் ஆவரே ॥ **2.10** ॥ 21

அடிவரவு — தேட்டு தோடு ஏறு தோய்த்த பொய் ஆதி காரினம் மாலை மொய்த்து அல்லி மெய்

தேட்டருந்திறல் முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 3 – மெய்யில்வாழ்க்கையை

‡ மெய்யில் வாழ்க்கையை ⋆
மெய் எனக் கொள்ளும் ⋆
இவ் வையம் தன்னொடும் ⋆
கூடுவதில்லை யான் ⋆
ஐயனே ⋆
அரங்கா ! என்றழைக்கின்றேன் ⋆
மையல் கொண்டொழிந்தேன் ⋆
என்தன் மாலுக்கே ‖ **3.1** ‖ 22

நூலினேர் இடையார் ⋆
திறத்தே நிற்கும் ⋆
ஞாலம் தன்னொடும் ⋆
கூடுவதில்லை யான் ⋆
ஆலியா அழையா ⋆
அரங்கா ! என்று ⋆
மால் எழுந்தொழிந்தேன் ⋆
என்தன் மாலுக்கே ‖ **3.2** ‖ 23

மாரனார் ⋆
வரி வெஞ்சிலைக்காட் செய்யும் ⋆
பாரினாரொடும் ⋆
கூடுவதில்லை யான் ⋆
ஆர மார்வன் ⋆

அரங்கன் அனந்தன் ⋆
நல் நாரணன் ⋆
நரகாந்தகன் பித்தனே ॥ **3.3** ॥ 24

உண்டியே உடையே ⋆
உகந்தோடும் ⋆
இம் மண்டலத்தொடும் ⋆
கூடுவதில்லை யான் ⋆
அண்ட வாணன் ⋆
அரங்கன் வன் பேய் முலை ⋆
உண்ட வாயன் தன் ⋆
உன்மத்தன் காண்மினே ॥ **3.4** ॥ 25

தீதில் நன்னெறி நிற்க ⋆
அல்லாது செய் ⋆
நீதி யாரொடும் ⋆
கூடுவதில்லை யான் ⋆
ஆதி ஆயன் ⋆
அரங்கன் அந் தாமரைப் ⋆
பேதை மா மணவாளன் தன் ⋆
பித்தனே ॥ **3.5** ॥ 26

எம் பரத்தர் ⋆
அல்லாரொடும் கூடலன் ⋆
உம்பர் வாழ்வை ⋆
ஒன்றாகக் கருதிலன் ⋆
தம் பிரான் அமரர்க்கு ⋆
அரங்க நகர் ⋆

எம் பிரானுக்கு ⋆
எழுமையும் பித்தனே ‖ **3.6** ‖ 27

எத்திறத்திலும் ⋆
யாரொடும் கூடும் ⋆
அச்சித்தந் தன்னைத் ⋆
தவிர்த்தனன் செங்கண் மால் ⋆
அத்தனே ! ⋆
அரங்கா ! என்றழைக்கின்றேன் ⋆
பித்தனாய் ஒழிந்தேன் ⋆
எம் பிரானுக்கே ‖ **3.7** ‖ 28

பேயரே ⋆
எனக்கு யாவரும் ⋆
யானும் ஓர் பேயனே ⋆
எவர்க்கும் இது பேசி என் ⋆
ஆயனே ! ⋆
அரங்கா ! என்றழைக்கின்றேன் ⋆
பேயனாய் ஒழிந்தேன் ⋆
எம் பிரானுக்கே ‖ **3.8** ‖ 29

‡ அங்கை ஆழி ⋆
அரங்கன் அடி இணை ⋆
தங்கு சிந்தைத் ⋆
தனிப் பெரும் பித்தனாய்க் ⋆
கொங்கர் கோன் ⋆
குலசேகரன் சொன்ன சொல் ⋆

இங்கு வல்லவர்க்கு ⋆
ஏதம் ஒன்றில்லையே ‖ **3.9** ‖

அடிவரவு — மெய் நூல் மாரனார் உண்டி தீதில் எம்பரத்தர் எத்திறத்திலும் பேயரே அங்கை ஊன்

மெய்யில்வாழ்க்கையை முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 4 – ஊனேறு

‡ ஊன் ஏறு செல்வத்து ⋆
உடற் பிறவி யான் வேண்டேன் ⋆
ஆன் ஏறேழ் வென்றான் ⋆
அடிமைத் திறம் அல்லால் ⋆
கூனேறு சங்கம் இடத்தான் தன் ⋆
வேங்கடத்துக் ⋆
கோனேரி வாழும் ⋆
குருகாய்ப் பிறப்பேனே ॥ **4.1** ॥ 31

ஆனாத செல்வத்து ⋆
அரம்பையர்கள் தற் சூழ ⋆
வான் ஆளும் செல்வமும் ⋆
மண் அரசும் யான் வேண்டேன் ⋆
தேன் ஆர் பூஞ்சோலைத் ⋆
திருவேங்கடச் சுனையில் ⋆
மீனாய்ப் பிறக்கும் ⋆
விதி உடையேன் ஆவேனே ॥ **4.2** ॥ 32

பின்னிட்ட சடையானும் ⋆
பிரமனும் இந்திரனும் ⋆
துன்னிட்டுப் புகல் அரிய ⋆
வைகுந்த நீள் வாசல் ⋆
மின் வட்டச் சுடர் ஆழி ⋆

வேங்கடக்கோன் தான் உமிழும் ⋆
பொன் வட்டில் பிடித்துடனே ⋆
புகப் பெறுவேன் ஆவேனே ‖ **4.3** ‖ 33

ஒண் பவள வேலை ⋆
உலவு தண் பாற்கடலுள் ⋆
கண் துயிலும் மாயோன் ⋆
கழல் இணைகள் காண்பதற்கு ⋆
பண் பகரும் வண்டினங்கள் ⋆
பண் பாடும் வேங்கடத்துச் ⋆
செண்பகமாய் நிற்கும் ⋆
திருவுடையேன் ஆவேனே ‖ **4.4** ‖ 34

கம்ப மத யானை ⋆
கழுத்தகத்தின் மேல் இருந்து ⋆
இன்பமரும் செல்வமும் ⋆
இவ் அரசும் யான் வேண்டேன் ⋆
எம் பெருமான் ஈசன் ⋆
எழில் வேங்கட மலை மேல் ⋆
தம்பகமாய் நிற்கும் ⋆
தவம் உடையேன் ஆவேனே ‖ **4.5** ‖ 35

மின் அனைய நுண் இடையார் ⋆
உருப்பசியும் மேனகையும் ⋆
அன்னவர்தம் பாடலொடும் ⋆
ஆடல் அவை ஆதரியேன் ⋆
தென்னவென வண்டினங்கள் ⋆
பண் பாடும் வேங்கடத்துள் ⋆

அன்னனைய பொற்குவடாம் ⋆
அருந்தவத்தென் ஆவேனே ‖ **4.6** ‖ 36

வான் ஆளும் மா மதி போல் ⋆
வெண் குடைக் கீழ் ⋆
மன்னவர் தம் கோன் ஆகி வீற்றிருந்து ⋆
கொண்டாடும் செல்வறியேன் ⋆
தேனார் பூஞ்சோலைத் ⋆
திரு வேங்கட மலை மேல் ⋆
கான் ஆறாய்ப் பாயும் ⋆
கருத்துடையேன் ஆவேனே ‖ **4.7** ‖ 37

பிறை ஏறு சடையானும் ⋆
பிரமனும் இந்திரனும் ⋆
முறையாய பெரு வேள்விக் ⋆
குறை முடிப்பான் மறை ஆனான் ⋆
வெறியார் தண் சோலைத் ⋆
திரு வேங்கடமலை மேல் ⋆
நெறியாய்க் கிடக்கும் ⋆
நிலை உடையேன் ஆவேனே ‖ **4.8** ‖ 38

‡ செடியாய வல்வினைகள் ⋆
தீர்க்கும் திருமாலே ⋆
நெடியானே ! வேங்கடவா ! ⋆
நின் கோயிலின் வாசல் ⋆
அடியாரும் வானவரும் ⋆
அரம்பையரும் கிடந்தியங்கும் ⋆

படியாய்க் கிடந்து ⋆
உன் பவளவாய் காண்பேனே ‖ **4.9** ‖ 39

உம்பர் உலகாண்டு ⋆
ஒரு குடைக் கீழ் உருப்பசி தன் ⋆
அம் பொற் கலை அல்குல் ⋆
பெற்றாலும் ஆதரியேன் ⋆
செம் பவள வாயான் ⋆
திருவேங்கடம் என்னும் ⋆
எம் பெருமான் பொன் மலை மேல் ⋆
ஏதேனும் ஆவேனே ‖ **4.10** ‖ 40

‡ மன்னிய தண் சாரல் ⋆
வட வேங்கடத்தான் தன் ⋆
பொன் இயலும் சேவடிகள் ⋆
காண்பான் புரிந்திறைஞ்சி ⋆
கொன்னவிலும் கூர்வேல் ⋆
குலசேகரன் சொன்ன ⋆
பன்னிய நூல் தமிழ் வல்லார் ⋆
பாங்காய பத்தர்களே ‖ **4.11** ‖ 41

அடிவரவு — ஊன் ஆனாத பின்னிட்ட ஒண் கம்பம் மின் வான் பிறை செடி உம்பர் மன்னிய தரு

ஊனேறு முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 5 – தருதுயரந்தடாயேல்

‡ தரு துயரம் தடாயேல் ⋆
உன் சரண் அல்லால் சரண் இல்லை ⋆
விரை குழுவும் மலர்ப் பொழில் சூழ் ⋆
விற்றுவக்கோட்டம்மானே ⋆
அரிசினத்தால் ஈன்ற தாய் ⋆
அகற்றிடினும் ⋆
மற்றவள் தன் அருள் நினைந்தே அழும் குழவி ⋆
அதுவே போன்றிருந்தேனே ‖ **5.1** ‖ 42

கண்டார் இகழ்வனவே ⋆
காதலன் தான் செய்திடினும் ⋆
கொண்டானை அல்லால் ⋆
அறியாக் குல மகள் போல் ⋆
விண் தோய் மதிள் புடை சூழ் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
நீ கொண்டாளாயாகிலும் ⋆
உன் குரை கழலே கூறுவனே ‖ **5.2** ‖ 43

மீன் நோக்கும் நீள் வயல் சூழ் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
என் பால் நோக்காய் ஆகிலும் ⋆
உன் பற்றல்லால் பற்றிலேன் ⋆
தான் நோக்காது ⋆

எத்துயரம் செய்திடினும் ⋆
தார் வேந்தன் கோல் நோக்கி வாழும் ⋆
குடி போன்றிருந்தேனே ‖ **5.3** ‖ 44

வாளால் அறுத்துச் சுடினும் ⋆
மருத்துவன் பால் ⋆
மாளாத காதல் ⋆
நோயாளன் போல் மாயத்தால் ⋆
மீளாத் துயர் தரினும் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
நீ ஆளா உனதருளே ⋆
பார்ப்பன் அடியேனே ‖ **5.4** ‖ 45

வெங்கண் திண் களிறடர்த்தாய் ⋆
விற்றுவக்கோட்டம்மானே ⋆
எங்குப் போய் உய்கேன் ⋆
உன் இணை அடியே அடையல் அல்லால் ⋆
எங்கும் போய்க் கரை காணாது ⋆
எறி கடல் வாய் மீண்டேயும் ⋆
வங்கத்தின் கூம்பேறும் ⋆
மாப் பறவை போன்றேனே ‖ **5.5** ‖ 46

செந் தழலே வந்து ⋆
அழலைச் செய்திடினும் ⋆
செங்கமலம் அந்தரம் சேர் ⋆
வெங்கதிரோற்கல்லால் அலராவால் ⋆
வெந் துயர் வீட்டாவிடினும் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆

உன் அந்தமில் சீர்க்கல்லால் ⋆
அகம் குழைய மாட்டேனே ‖ **5.6** ‖ 47

எத்தனையும் வான் மறந்த காலத்தும் ⋆
பைங்கூழ்கள் ⋆
மைத்தெழுந்த மா முகிலே ⋆
பார்த்திருக்கும் மற்றவை போல் ⋆
மெய்த் துயர் வீட்டாவிடினும் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
என் சித்தம் மிக உன் பாலே ⋆
வைப்பன் அடியேனே ‖ **5.7** ‖ 48

தொக்கிலங்கு யாறெல்லாம் ⋆
பரந்தோடித் ⋆
தொடு கடலே புக்கன்றிப் புறம் நிற்க ⋆
மாட்டாத மற்றவை போல் ⋆
மிக்கிலங்கு முகில் நிறத்தாய் ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆
உன் புக்கிலங்கு சீர் அல்லால் ⋆
புக்கிலன் காண் புண்ணியனே ‖ **5.8** ‖ 49

நின்னையே தான் வேண்டி ⋆
நீள் செல்வம் வேண்டாதான் ⋆
தன்னையே தான் வேண்டும் ⋆
செல்வம் போல் மாயத்தால் ⋆
மின்னையே சேர் திகிரி ⋆
விற்றுவக்கோட்டம்மா ⋆

நின்னையே தான் வேண்டி ⋆
நிற்பன் அடியேனே ‖ **5.9** ‖ 50

‡ விற்றுவக்கோட்டம்மா ⋆
நீ வேண்டாயே ஆயிடினும் ⋆
மற்றாரும் பற்றிலேன் என்று ⋆
அவனைத் தாள் நயந்த ⋆
கொற்ற வேல் தானைக் ⋆
குலசேகரன் சொன்ன ⋆
நற்றமிழ் பத்தும் வல்லார் ⋆
நண்ணார் நரகமே ‖ **5.10** ‖ 51

அடிவரவு — தரு கண்டார் மீன் வாளால் வெங்கண் செந்தழல் எத்தனை தொக்கு நின்னை விற்றுவக்கோடு ஏர்

தருதுயரந்தடாயேல் முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 6 – ஏர்மலர்ப்பூங்குழல்

‡ ஏர் மலர்ப் பூங்குழல் ஆயர் மாதர் ⋆
எனைப் பலர் உள்ள இவ்வூரில் ⋆
உன்தன் மார்வு தழுவுதற்காசையின்மை அறிந்தறிந்தே ⋆
உன்தன் பொய்யைக் கேட்டு ⋆
கூர் மழை போல் பனிக் கூதல் எய்திக் ⋆
கூசி நடுங்கி யமுனை யாற்றில் ⋆
வார் மணல் குன்றில் புலர நின்றேன் ⋆
வாசுதேவா ! உன் வரவு பார்த்தே ‖ **6.1** ‖ 52

கெண்டை ஒண் கண் மடவாள் ஒருத்தி ⋆
கீழை அகத்துத் தயிர் கடையக் கண்டு ⋆
ஒல்லை நானும் கடைவன் என்று ⋆
கள்ள விழியை விழித்துப் புக்கு ⋆
வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ ⋆
வாள் முகம் வேர்ப்பச் செவ்வாய்த் துடிப்ப ⋆
தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம் ⋆
தாமோதரா ! மெய் அறிவன் நானே ‖ **6.2** ‖ 53

கரு மலர்க் கூந்தல் ஒருத்தி தன்னைக் ⋆
கடைக் கணித்து ⋆
ஆங்கே ஒருத்தி தன் பால் மருவி மனம் வைத்து மற்றொருத்திக்குரைத்து ⋆
ஒரு பேதைக்குப் பொய் குறித்து ⋆
புரி குழல் மங்கை ஒருத்தி தன்னைப் புணர்தி ⋆

அவளுக்கும் மெய்யன் அல்லை ⋆
மருதிறுத்தாய் உன் வளர்த்தி ஊடே ⋆
வளர்கின்றதால் உன்தன் மாயை தானே ॥ **6.3** ॥ 54

தாய் முலைப் பாலில் அமுதிருக்கத் ⋆
தவழ்ந்து தளர் நடை இட்டுச் சென்று ⋆
பேய் முலை வாய் வைத்து நஞ்சை உண்டு ⋆
பித்தன் என்றே பிறர் ஏச நின்றாய் ⋆
ஆய் மிகு காதலோடு யான் இருப்ப ⋆
யான் விட வந்த என் தூதியோடே ⋆
நீ மிகு போகத்தை நங்குகந்தாய் ⋆
அதுவும் உன் கோரம்புக்கேற்கும் அன்றே ॥ **6.4** ॥ 55

மின் ஒத்த நுண் இடையாளைக் கொண்டு ⋆
வீங்கிருள் வாய் என்தன் வீதி ஊடே ⋆
பொன்னொத்த ஆடை குக்கூடல் இட்டுப் ⋆
போகின்ற போது நான் கண்டு நின்றேன் ⋆
கண்ணுற்றவளை நீ கண்ணால் இட்டுக் ⋆
கை விளிக்கின்றதும் கண்டே நின்றேன் ⋆
என்னுக்கவளை விட்டிங்கு வந்தாய் ⋆
இன்னம் அங்கே நட நம்பி ! நீயே ॥ **6.5** ॥ 56

மற் பொரு தோள் உடை வாசுதேவா ⋆
வல் வினையேன் துயில் கொண்டவாறே ⋆
இற்றை இரவிடை ஏமத்தென்னை ⋆
இன் அணை மேல் இட்டகன்று நீ போய் ⋆
அற்றை இரவும் ஓர் பிற்றை நாளும் ⋆
அரிவையரோடும் அணைந்து வந்தாய் ⋆

எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய் ⋆
எம் பெருமான் ! நீ எழுந்தருளே ॥ **6.6** ॥ 57

பை அரவின் அணைப் பள்ளியினாய் ⋆
பண்டையோம் அல்லோம் நாம் ⋆
நீ உகக்கும் மையரி ஒண் கண்ணினாரும் அல்லோம் ⋆
வைகி எம் சேரி வரவொழி நீ ⋆
செய்ய உடையும் திருமுகமும் ⋆
செங்கனி வாயும் குழலும் கண்டு ⋆
பொய் ஒரு நாள் பட்டதே அமையும் ⋆
புள்ளுவம் பேசாதே போகு நம்பீ ॥ **6.7** ॥ 58

என்னை வருக எனக் குறித்திட்டு ⋆
இன மலர் முல்லையின் பந்தர் நீழல் ⋆
மன்னி அவளைப் புணரப் புக்கு ⋆
மற்றென்னைக் கண்டுழறா நெகிழ்ந்தாய் ⋆
பொன்னிற ஆடையைக் கையில் தாங்கிப் ⋆
பொய் அச்சம் காட்டி நீ போதி ஏலும் ⋆
இன்னம் என் கையகத்தீங்கொரு நாள் ⋆
வருதியேல் என் சினம் தீர்வன் நானே ॥ **6.8** ॥ 59

மங்கல நல் வனமாலை மார்வில் இலங்க ⋆
மயில் தழைப் பீலி சூடி ⋆
பொங்கிள ஆடை அரையில் சாத்திப் ⋆
பூங்கொத்துக் காதில் புணரப் பெய்து ⋆
கொங்கு நறுங்குழலார்களோடு ⋆
குழைந்து குழல் இனிதூதி வந்தாய் ⋆

எங்களுக்கே ஒரு நாள் வந்தூத ⋆
உன் குழலின் இசை போதராதே ‖ **6.9** ‖ 60

‡ அல்லி மலர்த் திருமங்கை கேள்வன் தன்னை நயந்து ⋆
இள ஆய்ச்சிமார்கள் ⋆
எல்லிப் பொழுதினில் ஏமத்தூடி ⋆
எள்கி உரைத்த உரை அதனைக் ⋆
கொல்லி நகர்க்கிறை கூடல் கோமான் ⋆
குலசேகரன் இன் இசையில் மேவிச் ⋆
சொல்லிய இன் தமிழ் மாலை பத்தும் ⋆
சொல்ல வல்லார்க்கில்லை துன்பந் தானே ‖ **6.10** ‖ 61

அடிவரவு — ஏர் கெண்டை கரு தாய் மின் மற்பொரு பை என்னை மங்கலம் அல்லி ஆலை

ஏர்மலர்ப்பூங்குழல் முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 7 – ஆலைநீள் கரும்பு

‡ ஆலை நீள் கரும்பன்னவன் தாலோ ⋆
அம்புயத் தடங்கண்ணினன் தாலோ ⋆
வேலை நீர் நிறத்தன்னவன் தாலோ ⋆
வேழப் போதகம் அன்னவன் தாலோ ⋆
ஏல வார் குழல் என் மகன் தாலோ ⋆
என்றென்றுன்னை என் வாயிடை நிறையத் ⋆
தால் ஒலித்திடும் திருவினை இல்லாத் ⋆
தாயரில் கடை ஆயின தாயே ‖ **7.1** ‖ 62

வடிக் கொள் அஞ்சனம் எழுது செம் மலர்க் கண் ⋆
மருவி மேல் இனிதொன்றினை நோக்கி ⋆
முடக்கிச் சேவடி மலர்ச் சிறு கருந்தாள் ⋆
பொலியும் நீர் முகிற் குழவியே போல ⋆
அடக்கியாரச் செஞ்சிறு விரல் அனைத்தும் ⋆
அங்கையோடணைந்தானையிற் கிடந்த ⋆
கிடக்கை கண்டிடப் பெற்றிலன் அந்தோ ⋆
கேசவா ! கெடுவேன் கெடுவேனே ‖ **7.2** ‖ 63

முந்தை நன்முறை அன்புடை மகளிர் ⋆
முறை முறை தம் தம் குறங்கிடை இருத்தி ⋆
எந்தையே ! என்தன் குலப் பெரும் சுடரே ⋆
எழு முகில் கணத்தெழில் கவர் ஏறே ⋆
உந்தை யாவன் என்றுரைப்ப ⋆

நின் செங்கேழ் விரலினும் கடைக் கண்ணினும் காட்ட ⋆
நந்தன் பெற்றனன் நல் வினை இல்லா ⋆
நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே ‖ **7.3** ‖ 64

களிநிலா எழில் மதி புரை முகமும் ⋆
கண்ணனே ! திண்கை மார்வும் திண் தோளும் ⋆
தளி மலர்க் கருங்குழல் பிறை அதுவும் ⋆
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த ⋆
இளமை இன்பத்தை இன்றென்தன் கண்ணால் ⋆
பருகு வேற்கிவள் தாயென நினைந்த ⋆
அளவில் பிள்ளைமை இன்பத்தை இழந்த ⋆
பாவியேன் எனதாவி நில்லாதே ‖ **7.4** ‖ 65

மருவும் நின் திரு நெற்றியில் சுட்டி அசைதர ⋆
மணி வாயிடை முத்தம் தருதலும் ⋆
உன்தன் தாதையைப் போலும் வடிவு கண்டு கொண்டு ⋆
உள்ளம் உள் குளிர ⋆
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து ⋆
வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும் ⋆
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் ⋆
எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றாளே ‖ **7.5** ‖ 66

தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணா ⋆
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால் ⋆
மண்ணில் செம் பொடி ஆடி வந்து ⋆
என்தன் மார்வில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ ⋆
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும் ⋆
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில் ⋆

உண்ணப் பெற்றிலேன் ஓ ! கொடு வினையேன் ⋆
என்னை என் செய்யப் பெற்றதெம் மோயே ‖ **7.6** ‖ 67

குழகனே ! என்தன் கோமளப் பிள்ளாய் ⋆
கோவிந்தா ! என் குடங்கையில் மன்னி ⋆
ஒழுகு பேர் எழில் இளம் சிறு தளிர் போல் ⋆
ஒரு கையால் ஒரு முலை முகம் நெருடா ⋆
மழலை மென்னகை இடை இடை அருளா ⋆
வாயிலே முலை இருக்க என் முகத்தே ⋆
எழில் கொள் நின் திருக் கண்ணிணை நோக்கந் தன்னையும் ⋆
இழந்தேன் இழந்தேனே ‖ **7.7** ‖ 68

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும் ⋆
முகிழ் இளம் சிறுத் தாமரைக் கையும் ⋆
எழில் கொள் தாம்பு கொண்டடிப்பதற் கெள்கு நிலையும் ⋆
வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும் ⋆
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும் ⋆
அணி கொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும் ⋆
தொழுகையும் இவை கண்ட அசோதை ⋆
தொல்லை இன்பத்திறுதி கண்டாளே ‖ **7.8** ‖ 69

குன்றினால் குடை கவித்ததும் ⋆
கோலக் குரவை கோத்ததும் குடம் ஆட்டும் ⋆
கன்றினால் விளவெறிந்ததும் ⋆
காலால் காளியன் தலை மிதித்ததும் முதலா ⋆
வென்றி சேர் பிள்ளை நல் விளையாட்டம் அனைத்திலும் ⋆
அங்கென் உள்ளம் உள் குளிர ⋆

ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன் அடியேன் ⋆
காணும் ஆறினி உண்டெனில் அருளே ॥ **7.9** ॥ 70

வஞ்ச மேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி ⋆
வரண்டு நார் நரம்பெழக் கரிந்துக்க ⋆
நஞ்சம் ஆர்தரு சுழி முலை அந்தோ ⋆
சுவைத்து நீ அருள் செய்து வளர்ந்தாய் ⋆
கஞ்சன் நாள் கவர் கரு முகில் எந்தாய் ⋆
கடைப்பட்டேன் வறிதே முலை சுமந்து ⋆
தஞ்ச மேல் ஒன்றிலேன் உய்ந்திருந்தேன் ⋆
தக்கதே நல்ல தாயைப் பெற்றாயே ॥ **7.10** ॥ 71

‡ மல்லை மா நகர்க்கிறையவன் தன்னை ⋆
வான் செலுத்தி வந்தீங்கணை மாயத்து ⋆
எல்லையில் பிள்ளை செய்வன காணாத் ⋆
தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல் ⋆
கொல்லி காவலன் மால் அடி முடி மேல் ⋆
கோலமாம் குலசேகரன் சொன்ன ⋆
நல் இசைத் தமிழ் மாலை வல்லார்கள் ⋆
நண்ணுவார் ஒல்லை நாரணன் உலகே ॥ **7.11** ॥ 72

அடிவரவு — ஆலை வடி முந்தை களி மருவு தண்ணம் குழகன் முழுதும் குன்றினால் வஞ்சம் மல்லை மன்னு

ஆலைநீள் கரும்பு முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8 – மன்னு புகழ்

‡ மன்னு புகழ் கௌசலை தன் ⋆
மணிவயிறு வாய்த்தவனே ⋆
தென் இலங்கைக் கோன் முடிகள் ⋆
சிந்துவித்தாய் செம் பொன் சேர் ⋆
கன்னி நன் மா மதிள் புடை சூழ் ⋆
கணபுரத்தென் கரு மணியே ⋆
என்னுடைய இன்னமுதே ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.1** ‖ 73

புண்டரிக மலர் அதன் மேல் ⋆
புவனி எல்லாம் படைத்தவனே ⋆
திண் திறலாள் தாடகை தன் ⋆
உரம் உருவச் சிலை வளைத்தாய் ⋆
கண்டவர் தம் மனம் வழங்கும் ⋆
கணபுரத்தென் கரு மணியே ⋆
எண்டிசையும் ஆள் உடையாய் ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.2** ‖ 74

கொங்கு மலி கருங்குழலாள் ⋆
கௌசலை தன் குல மதலாய் ⋆
தங்கு பெரும் புகழ்ச் சனகன் ⋆
திரு மருகா தாசரதீ ⋆
கங்கையிலும் தீர்த்த மலி ⋆

கணபுரத்தென் கரு மணியே ⋆
எங்கள் குலத்தின் அமுதே ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.3** ‖ 75

தாமரை மேல் அயன் அவனைப் ⋆
படைத்தவனே ⋆
தயரதன் தன் மா மதலாய் ⋆
மைதிலி தன் மணவாளா ! ⋆
வண்டினங்கள் காமரங்கள் இசை பாடும் ⋆
கணபுரத்தென் கரு மணியே ⋆
ஏ மருவும் சிலை வலவா ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.4** ‖ 76

பார் ஆளும் படர் செல்வம் ⋆
பரத நம்பிக்கே அருளி ⋆
ஆரா அன்பிளையவனோடு ⋆
அருங்கானம் அடைந்தவனே ⋆
சீர் ஆளும் வரை மார்பா ⋆
திருக் கண்ண புரத்தரசே ⋆
தார் ஆளும் நீண் முடி ⋆
என் தாசரதீ ! தாலேலோ ! ‖ **8.5** ‖ 77

சுற்றம் எல்லாம் பின் தொடரத் ⋆
தொல் கானம் அடைந்தவனே ⋆
அற்றவர்கட்கரு மருந்தே ⋆
அயோத்தி நகர்க்கதிபதியே ⋆
கற்றவர்கள் தாம் வாழும் ⋆
கணபுரத்தென் கரு மணியே ⋆

சிற்றவை தன் சொற் கொண்ட ⋆
சீராமா ! தாலேலோ ! ‖ **8.6** ‖ 78

ஆலின் இலைப் பாலகனாய் ⋆
அன்றுலகம் உண்டவனே ⋆
வாலியை கொன்றரசு ⋆
இளைய வானரத்துக்களித்தவனே ⋆
காலின் மணி கரை அலைக்கும் ⋆
கணபுரத்தென் கரு மணியே ⋆
ஆலி நகர்க்கதிபதியே ⋆
அயோத்திமனே ! தாலேலோ ! ‖ **8.7** ‖ 79

மலை அதனால் அணை கட்டி ⋆
மதிள் இலங்கை அழித்தவனே ⋆
அலை கடலைக் கடைந்து ⋆
அமரர்க்கமுதருளிச் செய்தவனே ⋆
கலை வலவர் தாம் வாழும் ⋆
கணபுரத்தென் கரு மணியே ⋆
சிலை வலவா சேவகனே ⋆
சீராமா ! தாலேலோ ! ‖ **8.8** ‖ 80

தளை அவிழும் நறுங்குஞ்சித் ⋆
தயரதந் தன் குல மதலாய் ⋆
வளைய ஒரு சிலை அதனால் ⋆
மதிள் இலங்கை அழித்தவனே ⋆
களை கழுநீர் மருங்கலரும் ⋆
கணபுரத்தென் கரு மணியே ⋆

இளையவர்கட்கருள் உடையாய் ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.9** ‖ 81

‡ தேவரையும் அசுரரையும் ⋆
திசைகளையும் படைத்தவனே ⋆
யாவரும் வந்தடிவணங்க ⋆
அரங்க நகர்த் துயின்றவனே ⋆
காவிரி நல் நதி பாயும் ⋆
கணபுரத்தென் கரு மணியே ⋆
ஏ வரி வெஞ்சிலை வலவா ⋆
இராகவனே ! தாலேலோ ! ‖ **8.10** ‖ 82

‡ கன்னி நன் மா மதிள் புடை சூழ் ⋆
கணபுரத்தென் காகுத்தன் தன் அடிமேல் ⋆
தாலேலோ என்றுரைத்த ⋆
தமிழ் மாலை ⋆
கொல் நவிலும் வேல் வலவன் ⋆
குடைக் குலசேகரன் சொன்ன ⋆
பன்னிய நூல் பத்தும் வல்லார் ⋆
பாங்காய பத்தர்களே ‖ **8.11** ‖ 83

அடிவரவு — மன்னு புன்டரிகம் கொங்கு தாமரை பார் சுற்றம் ஆலின் மலை தளை தேவரை கன்னி வன்தாள்

மன்னு புகழ் முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 9 – வன்தாளினிணை

‡ வன் தாளின் இணை வணங்கி வள நகரம் தொழுதேத்த ⋆
மன்னன் ஆவான் நின்றாயை ⋆
அரி அணை மேல் இருந்தாயை ⋆
நெடுங்கானம் படரப் போகு என்றாள் ⋆
எம் இராமாவோ ⋆
உனைப் பயந்த கைகேசி தன் சொற் கேட்டு ⋆
நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன் ⋆
நன்மகனே ! உன்னை நானே ‖ **9.1** ‖ 84

வெவ்வாயேன் வெவ்வுரை கேட்டு ⋆
இரு நிலத்தை வேண்டாதே விரைந்து ⋆
வென்றி மை வாய களிறொழிந்து தேர் ஒழிந்து மா ஒழிந்து ⋆
வனமே மேவி ⋆
நெய் வாய வேல் நெடுங்கண் ⋆
நேர் இழையும் இளங்கோவும் பின்பு போக ⋆
எவ்வாறு நடந்தனை எம் இராமாவோ ! ⋆
எம் பெருமான் ! என் செய்கேனே ‖ **9.2** ‖ 85

கொல் அணை வேல் வரி நெடுங்கண் ⋆
கௌசலை தன் குல மதலாய் ! குனி வில் ஏந்தும் ⋆
மல் அணைந்த வரைத் தோளா ⋆
வல் வினையேன் மனம் உருக்கும் வகையே கற்றாய் ⋆
மெல் அணை மேல் முன் துயின்றாய் ⋆

இன்றினிப் போய் வியன் கான மரத்தின் நீழல் ⋆
கல் அணை மேல் கண் துயிலக் கற்றனையோ ⋆
காகுத்தா ! கரிய கோவே ‖ **9.3** ‖ 86

வா போகு வா இன்னம் வந்து ⋆
ஒரு கால் கண்டு போ மலராள் கூந்தல் ⋆
வேய் போலும் எழில் தோளி தன் பொருட்டா ⋆
விடையோன் தன் வில்லைச் செற்றாய் ⋆
மா போகு நெடுங்கானம் ⋆
வல் வினையேன் மனம் உருக்கும் மகனே ! ⋆
இன்று நீ போக என் நெஞ்சம் ⋆
இரு பிளவாய்ப் போகாதே நிற்கு மாறே ‖ **9.4** ‖ 87

பொருந்தார் கை வேல் நுதி போல் பரல் பாய ⋆
மெல் அடிக்கள் குருதி சோர ⋆
விரும்பாத கான் விரும்பி வெயில் உறைப்ப ⋆
வெம் பசி நோய் கூர ⋆
இன்று பெரும் பாவியேன் மகனே ! போகின்றாய் ⋆
கேகயர் கோன் மகளாய்ப் பெற்ற ⋆
அரும் பாவி சொற் கேட்ட அரு வினையேன் ⋆
என் செய்கேன் ! அந்தோ ! யானே ‖ **9.5** ‖ 88

அம்மா ! என்றுகந்தழைக்கும் ⋆
ஆர்வச் சொல் கேளாதே அணி சேர் மார்வம் ⋆
என் மார்வத்திடை அழுந்தத் தழுவாதே ⋆
முழுசாதே மோவாதுச்சி ⋆
கைம்மாவின் நடை அன்ன மென்னடையும் ⋆
கமலம் போல் முகமும் காணாது ⋆

எம்மானை என் மகனை இழந்திட்ட ⋆
இழி தகையேன் இருக்கின்றேனே ‖ **9.6** ‖ 89

பூ மருவு நறுங்குஞ்சி புன் சடையாப் புனைந்து ⋆
பூந் துகில் சேர் அல்குல் ⋆
காமர் எழில் விழல் உடுத்துக் கலன் அணியாது ⋆
அங்கங்கள் அழகு மாறி ⋆
ஏ மரு தோள் என் புதல்வன் ⋆
யான் இன்று செலத்தக்க வனம் தான் சேர்தல் ⋆
தூ மறையீர் இது தகவோ ⋆
சுமந்திரனே ! வசிட்டனே ! சொல்லீர் நீரே ‖ **9.7** ‖ 90

பொன் பெற்றார் எழில் வேதப் புதல்வனையும் ⋆
தம்பியையும் பூவை போலும் ⋆
மின் பற்றா நுண் மருங்குல் ⋆
மெல்லியல் என் மருகியையும் வனத்தில் போக்கி ⋆
நின் பற்றா நின் மகன் மேல் பழி விளைத்திட்டு ⋆
என்னையும் நீள் வானில் போக்க ⋆
என் பெற்றாய் கைகேசீ ⋆
இரு நிலத்தில் இனிதாக இருக்கின்றாயே ‖ **9.8** ‖ 91

முன் ஒரு நாள் மழு ஆளி சிலை வாங்கி ⋆
அவன் தவத்தை முற்றும் செற்றாய் ⋆
உன்னையும் உன் அருமையையும் உன்மோயின் வருத்தமும் ⋆
ஒன்றாகக் கொள்ளாது ⋆
என்னையும் என் மெய் உரையும் மெய்யாகக் கொண்டு ⋆
வனம் புக்க எந்தாய் ⋆

நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன் ⋆
ஏழ் பிறப்பும் நெடுந் தோள் வேந்தே ‖ **9.9** ‖ 92

தேனகு மா மலர்க் கூந்தல் கௌசலையும் ⋆
சுமித்திரையும் சிந்தை நோவ ⋆
கூன் உருவின் கொடுந்தொழுத்தை சொற் கேட்ட ⋆
கொடியவள் தன் சொற் கொண்டு ⋆
இன்று கானகமே மிக விரும்பி ⋆
நீ துறந்த வள நகரைத் துறந்து ⋆
நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன் ⋆
மனு குலத்தார் தங்கள் கோவே ‖ **9.10** ‖ 93

‡ ஏர் ஆர்ந்த கரு நெடுமால் இராமனாய் ⋆
வனம் புக்க அதனுக்காற்றாத் ⋆
தார் ஆர்ந்த தடவரைத் தோள் தயரதன் தான் புலம்பிய ⋆
அப்புலம்பல் தன்னை ⋆
கூர் ஆர்ந்த வேல் வலவன் கோழியர் கோன் ⋆
குடைக் குலசேகரன் சொற் செய்த ⋆
சீர் ஆர்ந்த தமிழ் மாலை இவை வல்லார் ⋆
தீ நெறிக்கண் செல்லார் தாமே ‖ **9.11** ‖ 94

அடிவரவு — வன்தாள் வெவ்வாயேன் கொல்லணை வாபோகு பொருந்தார் அம்மா பூ பொன் முன் தேன் ஏரார்ந்த அங்கண்

வன்தாளினிணை முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 10 – அங்கண் நெடுமதிள்

‡ அங்கணெடு மதிள் புடை சூழ் அயோத்தி என்னும் ⋆
அணி நகரத்துலகனைத்தும் விளக்கும் சோதி ⋆
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி ⋆
விண் முழுதும் உயக் கொண்ட வீரன் தன்னைச் ⋆
செங்கண் நெடுங்கரு முகிலை இராமன் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
எங்கள் தனி முதல்வனை எம் பெருமான் தன்னை ⋆
என்று கொலோ கண் குளிரக் காணும் நாளே ॥ **10.1** ॥ 95

வந்தெதிர்ந்த தாடகை தன் உரத்தைக் கீறி ⋆
வரு குருதி பொழி தரவன் கணை ஒன்றேவி ⋆
மந்திரம் கொள் மறை முனிவன் வேள்வி காத்து ⋆
வல் அரக்கர் உயிர் உண்ட மைந்தன் காண்மின் ⋆
செந்தளிர்வாய் மலர் நகை சேர் செழுந் தண் சோலைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த ⋆
அணி மணி ஆசனத்திருந்த அம்மான் தானே ॥ **10.2** ॥ 96

செவ்வரி நற் கரு நெடுங்கண் சீதைக் காகிச் ⋆
சின விடையோன் சிலை இறுத்து மழு வாள் ஏந்தி ⋆
வெவ்வரி நற் சிலை வாங்கி வென்றி கொண்டு ⋆
வேல் வேந்தர் பகை தடிந்த வீரன் தன்னை ⋆
தெவ்வர் அஞ்சு நெடும் புரிசை உயர்ந்த பாங்கர்த் ⋆

தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
எவ்வரி வெம் சிலைத் தடக்கை இராமன் தன்னை ⋆
இறைஞ்சுவார் இணை அடியே இறைஞ்சினேனே ॥ **10.3** ॥ 97

தொத்தலர் பூஞ்சுரி குழல் கைகேசி சொல்லால் ⋆
தொன்னகரம் துறந்து துறைக் கங்கை தன்னை ⋆
பத்தி உடைக் குகன் கடத்த வனம் போய்ப் புக்குப் ⋆
பரதனுக்கு பாதுகமும் அரசும் ஈந்து ⋆
சித்திரகூடத்திருந்தான் தன்னை ⋆
இன்று தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
எத்தனையும் கண் குளிரக் காணப் பெற்ற ⋆
இரு நிலத்தார்க்கிமையவர் நேர் ஒவ்வார் தாமே ॥ **10.4** ॥ 98

வலி வணக்கு வரை நெடுந் தோள் விராதைக் கொன்று ⋆
வண் தமிழ் மா முனி கொடுத்த வரி வில் வாங்கி ⋆
கலை வணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கிக் ⋆
கரனோடு தூடணன் தன் உயிரை வாங்கி ⋆
சிலை வணக்கி மான் மரிய எய்தான் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
தலை வணக்கிக் கை கூப்பி ஏத்த வல்லார் ⋆
திரிதலால் தவம் உடைத்துத் தரணி தானே ॥ **10.5** ॥ 99

தன மருவு வைதேகி பிரியல் உற்றுத் ⋆
தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத்தேற்றி ⋆
வன மருவு கவி அரசன் காதல் கொண்டு ⋆
வாலியைக் கொன்றிலங்கை நகர் அரக்கர் கோமான் ⋆
சினம் அடங்க மாருதியால் சுடுவித்தானைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆

இனிதமர்ந்த அம்மானை இராமன் தன்னை ⋆
ஏத்துவார் இணை அடியே ஏத்தினேனே ॥ **10.6** ॥ 100

குரை கடலை அடல் அம்பால் மறுக வெய்து ⋆
குலை கட்டி மறு கரையை அதனால் ஏறி ⋆
எரி நெடு வேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன் ⋆
இன்னுயிர் கொண்டவன் தம்பிக்கரசும் ஈந்து ⋆
திருமகளோடினிதமர்ந்த செல்வன் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
அரசமர்ந்தான் அடி சூடும் அரசை அல்லால் ⋆
அரசாக எண்ணேன் மற்றரசு தானே ॥ **10.7** ॥ 101

அம்பொனெடு மணி மாட அயோத்தி எய்தி ⋆
அரசெய்தி அகத்தியன்வாய்த் தான் முன் கொன்றான் தன் ⋆
பெருந் தொல் கதைக் கேட்டு மிதிலைச் செல்வி ⋆
உலகுய்யத் திரு வயிறு வாய்த்த மக்கள் ⋆
செம் பவளத் திரள் வாய்த் தன் சரிதை கேட்டான் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
எம் பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால் பருகுவோம் ⋆
இன் அமுதம் மதியோம் இன்றே ॥ **10.8** ॥ 102

செறி தவச் சம்புகன் தன்னைச் சென்று கொன்று ⋆
செழு மறையோன் உயிர் மீட்டுத் தவத்தோன் ஈந்த ⋆
நிறை மணிப் பூண் அணியும் கொண்டிலவணன் தன்னைத் ⋆
தம்பியால் வான் ஏற்றி முனிவன் வேண்ட ⋆
திறல் விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் உறைவானை ⋆

மறவாத உள்ளந் தன்னை உடையோம் ⋆
மற்றுறு துயரம் அடையோம் இன்றே ‖ **10.9** ‖ 103

‡ அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி ⋆
அடல் அரவப் பகை ஏறி அசுரர் தம்மை வென்று ⋆
இலங்கு மணி நெடுந் தோள் நான்கும் தோன்ற ⋆
விண் முழுதும் எதிர் வரத் தன் தாமம் மேவி ⋆
சென்றினிது வீற்றிருந்த அம்மான் தன்னைத் ⋆
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
என்றும் நின்றான் அவன் இவன் என்றேத்தி ⋆
நாளும் இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர் நீரே ‖ **10.10** ‖ 104

‡ தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் ⋆
திறல் விளங்கு மாருதியோடமர்ந்தான் தன்னை ⋆
எல்லை இல் சீர்த் தயரதன் தன் மகனாய்த் தோன்றிற்றது முதலாத் ⋆
தன் உலகம் புக்கதீறா ⋆
கொல் இயலும் படைத் தானைக் கொற்ற ஒள்வாள் ⋆
கோழியர் கோன் குடைக் குலசேகரன் சொற் செய்த ⋆
நல் இயல் இன் தமிழ் மாலை பத்தும் வல்லார் ⋆
நலந் திகழ் நாரணன் அடிக் கீழ் நண்ணுவாரே ‖ **10.11** ‖ 105

அடிவரவு — அங்கண் வந்து செவ்வரி தொத்து வலி தனம் குரை அம்பொன் செறி அன்று தில்லை பூநிலாய

அங்கண் நெடுமதிள் முற்றிற்று

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்